# ஒன்றிய நாடாளுமன்றம்

## இந்திய ஆட்சியியல்

*Copy Right @ Best Learning Centre*

*First Edition January 2020*

*All Rights Reserved*

# ஒன்றிய நாடாளுமன்றம்

## ஒன்றியச் சட்டமன்றம்: நாடாளுமன்றம்

- நாடாளுமன்றம், ஒன்றியச் சட்டமன்றம் அல்லது தேசிய சட்டமன்றம் என்று அறியப்படுகிறது.
- நாட்டினதும் அதன் மக்களின் நலன் சார்ந்த பிரச்சனைகள் மீதான விவாதத்திற்கும், அரசியல் அமைப்பில் சட்டங்களை இயற்றுவதற்கும், திருத்துவதற்கும், பதிலளிக்க கடமைபட்ட மிகவும் சக்தி வாய்ந்த தளமாக நாடாளுமன்றமே உள்ளது.
- ஒரு வருடத்தில் நாடாளுமன்றம் மூன்று கூட்டத்தொட ர்களை நடத்துகிறது:
    1. நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர் (பிப்ரவரி-மே )
    2. மழைக்காலக் கூட்டத்தொடர் (ஜூலை -ஆகஸ்ட்)
    3. குளிர்காலக் கூட்டத்தொடர் (நவம்பர் -டிசம்பர் )
- நாடாளுமன்றத்துக்கு இரு முக்கியமான அதிகாரங்கள் மற்றும் பணிகள் உள்ளன. அவை சட்ட அதிகாரம் மற்றும் நிதி அதிகாரம் ஆகியவைகளாகும்.
- சட்ட அதிகாரங்கள் சட்டம் இயற்றுவதற்கானவை.
- நிதி அதிகாரங்கள் நிதிநிலை அறிக்கை என்று அறியப்படுகிற நிதி சம்பந்தப்பட்ட நிதிநிலை அறிக்கை கணக்குகளை தயார் செய்வதற்கானது.

## மக்களவையின் செயல்பாடுகள்

- நாடாளுமன்றம் ஈரவைகளைக் கொண்டது.
    1. மக்களவை
    2. மாநிலங்களவை
- ஈரவைகளும் ஒரே மாதிரியான மதிப்பீடுகளையும் பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்டவை. இருப்பினும், நிதிச் செலவு ஒப்புதல் பெறுவது போன்ற சில விதிவிலக்குகள் உள்ளன.

**மக்களவை**

- மக்களவை, தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்ட, நாடெங்கிலுமுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர்களால், நாட்டின் 543 நாடாளுமன்றத் தொகுதிகளிலிருந்து, நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 543 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது மக்களவை ஆகும்.
- மக்களவையில் ஆங்கிலோ -இந்திய சமூகத்திலிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- மக்களவை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 545.

**மாநிலங்களவை**

- மாநிலங்களவை என்று அழைக்கப்படுவது, அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து வரும் 238 உறுப்பினர்களையும் மற்றும் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட 12 நியமன உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 250 உறுப்பினர்களைக் கொண்டது.
- மாநிலங்களவை அல்லது மேலவை இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டாவது ஆட்சி மன்றம் என்று அழைக்கப்படுகிறது.
- அமெரிக்காவிலுள்ள ஆட்சிமன்றக் குழுவைப்போல மாநிலங்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் ஒரு அமைப்பு மாநிலங்களவை ஆகும்.
- மாநிலங்களவை 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் தேதி உருவாக்கப்பட்டது.
- மாநிலங்களவை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**மாநிலங்களவையின் இடம்**

- மக்களவையுடன் ஒப்பிடும்போது, அரசமைப்பின் படியான மாநிலங்களவையின் இடத்தை மூன்று கோணங்களில் படிக்கலாம்.

1. மக்களவையும் மாநிலங்களவையும் சம அளவில் அதிகாரம் உள்ள இடங்கள்.

2. மாநிலங்களவையும் மக்களவையும் சமமற்ற அதிகாரம் கொண்டுள்ள இடங்கள்.
3. மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள் இவை மக்களவையுடன் பகிர்ந்து கொள்ளப்படாதவை.

**சட்டம் இயற்றும் நடைமுறைகள்**

- இந்திய நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் நடைமுறைகள் அதன் மக்களாட்சித் தத்துவத்தின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.
- சட்டம் இயற்றும் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளின் பங்கு மிக இன்றியமையாததாக அமைகிறது.
- இந்திய நாடாளுமன்றம் இரு வகையான முன்வரைவுகளை நிறைவேற்றுகிறது அவை :
    1. நிதி முன்வரைவு
    2. நிதிசாரா முன்வரைவு அல்லது சாதாரண அல்லது பொ து முன்வரைவு

**சட்டமன்றத்தின் அதிகாரம் :**

- இந்திய அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில், மத்திய மற்றும் மாநிலங்களின் சட்டரீதியான அதிகாரங்களும் செயல்பாடுகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.
- இவையே மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.
- இந்த அதிகாரங்கள் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன.
    1. ஒன்றியப் பட்டியல்
    2. மாநிலப் பட்டியல்
    3. பொதுப் பட்டியல்